## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 324 தலைப்பு "அறிவியல் ஆன்மீகம் மற்றும் சுதந்திரமாக செயல்படும் சுய விருப்பம்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 183-189 தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையா.அதாவது எதிரெதிர் ஆனதா ஸ்வாமி.

இது பற்றி தங்களின் மேலான அறிவுறைகளை எங்களுக்கு தந்தருள வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :

அறிவியல் என்பது மனிதனின் எண்ணம் மற்றும் உணர்வுகளை கருத்தில் கொள்ளாமல் செயல்படுவதாகும். அறிவியல் என்பது படைக்கப்பட்ட உலகத்தை ஆராய்வதாகும்.ஆன்மீகம் என்பது படைக்கின்ற தெய்வீகத்தை ஆராய்வதாகும்.

அறிவியல் அருகில் உள்ள சிருஷ்டியையும் ஆன்மீகம் என்பது சிருஷ்டியை தாண்டி தெய்வீக த்திலும் கவனம் செலுத்துகிறது.அறிவியல் என்பது பௌதிகத்தையும் ஆன்மீகம் என்பது இறுதி பொருளான பரமாத்மாவையும் பற்றியதாகும்.

அறிவியல் என்பது செயலற்ற ஜடப்பொருளின் மீது கவனம் செலுத்துகிறது.ஆன்மீகமோ ஜடத்தை தோற்றுவித்த பரத்தின் மீது கவனம் செலுத்துகிறது.

அறிவியல் என்பது உணர்வுகள் இல்லாத வறண்டதொன்றாகும்.ஆன்மீகம் என்பது அன்பு நிறைந்த பசுமையான தொன்றாகும்.

அறிவியல் என்பது வெளிப்புற செயல்பாட்டையும் ஆன்மீகம் என்பது உள்ளுணர்வு செயல்பாட்டையும் பின்பற்றுவதாகும்.அறிவியல் என்பது கண்ணுக்கு தெரிகின்ற பார்க்ககூடியவற்றையும் ஆன்மீகம் கண்களுக்கு புலப்படாத மறைபொருளான தெய்வீகத்தையும் அலசுகின்றது.

அறிவியல் என்பது கர்மேந்திரியங்களை கொண்டும் ஆன்மீகம் என்பது ஞானேந்திரியங்கள் மூலமாகவும் செயல்படுகிறது.

அறிவியல் என்பது நடந்த செயல்களின் விவரங்களை மண்டைக்குள் திணிப்பதாகும்.

ஆன்மீகம் என்பது உண்மை பொருளை மனதினால் உணர்ந்தறிவதாகும்.அறிவியல் என்பது C என்ற ஆங்கில எழுத்தை போல் ஓரிடத்தில் ஆரம்பித்து நடுவில் நின்று விடுவதாகும்.

ஆன்மீகம் என்பது O என்ற ஆங்கில எழுத்தை போல் பூரணமானதாகும்.அறிவியல் உபாயங்களை எடுத்துரைப்பதாகவும் ஆன்மீகம் அந்த உபாயங்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை காட்டுவதாகவும் உள்ளது.

கத்தியை கொண்டு காய்கறிகளைத்தான் வெட்ட வேண்டும் என வலியுறுத்துவது ஆன்மீகமாகும்.கத்தியை கொண்டு கழுத்தையும் வெட்டலாம் என சொல்வது அறிவியலாகும்.

ஆன்மீகம் என்பது எக்ஸ்ரே படம் போல.அறிவியல் என்பது சாதாரண போட்டோ படம் போல.ஆன்மீகம் என்பது நேர்மறை யானது.அறிவியல் என்பது எதிர்மறையானது.படைக்கப்பட்டது எதிர்மறையாகும்.படைத்தலை செய்வது நேர்மறை யானது.உங்கள் ஹிருதயத்தை நேர்மறையான ஆன்மீகத்தால் நிரப்பிக் கொள்ளுங்கள்.புலன்களின் வழியே அன்பை வெளிப்படுத்துங்கள்.ஆன்மீகமே நிலையான மாறாத தத்துவத்தை விளக்குகின்றது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி எங்களின் தினசரி வாழ்க்கையில் நாங்களும் சாதாரணமாக அன்பை அனுபவிக்கவே செய்கின்றோம்.இந்த சாதாரண அன்பு தெய்வீக அன்பிலிருந்து எவ்விதம் மாறுபடுகிறது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
உறவினர்களிடத்தில் காட்டுகின்றன அன்பு உலகாயதமானதாகும்.உலகமனைத்தையும் உள்ளடக்கி அன்பு செலுத்துவதே ஆன்மீகமாகும்.
உலகனத்தையும் உள்ளடக்கிய முதன்மையான அன்பே ஆன்மீக அன்பாகும்.அதுவே பிரபஞ்சமனைத்தையும் தழுவியதாகும்.

கேள்வி:
ஸ்வாமி இன்று அனைவரும் சுதந்திரமாக செயல்படும் சுய விருப்பம் பற்றி பேசுகின்றனர்.
மனிதர்களுக்கு உண்மையிலேயே சுய விருப்பம் என்ற ஒன்று இருக்கமுடியுமா?

ஸ்வாமியின் பதில் :
மனிதன் சுய விருப்பம் அல்லது சுய புத்தியுடன் செய்படுவது கிடையாது.

எப்போதும் புலன்களின் பின்னால் சென்று புலன்களுக்கு அடிமையாக இருக்கும் மனிதனுக்கு சுய புத்தி என்பது எப்படி இருக்க முடியும்.

கடவுள் மட்டுமே சுதந்திரமானவராக உள்ளதால் அவருடைய சங்கல்பம் மட்டுமே அனைத்தையும் தீர்மானிக்கின்றது.
இந்த சுய விருப்பம் என்பது முழுவதுமாக ஓர் தெய்வீக பண்பாகும்.

உதாரணத்திற்கு ஒரு மனிதன் பக்கவாத நோயால் பாதிக்கப்படுகிறான்.பாதிக்கப்பட்ட அந்த பகுதி அசைக்ககூட முடியாமல் முடங்கி விடுகிறது.
இப்போது அவன் முழு சுதந்திரமாக சுய விருப்பம் கொண்டு உடலின் அந்த பகுதியை அசைக்க முயன்றால் நடந்துவிடுமா.
இது நகைப்புக்குரியதல்லவா.
எனவே மனிதன் சுய விருப்பத்துடன் செயல்படுவதாக சொல்வது சரியல்ல.

கேள்வி:ஸ்வாமி தற்கால சமுதாயத்தில் எதுவுமே முழுமையாக அறிந்து கொள்ளபடாமல் அரைகுறையாகத்தானே புரிந்து கொள்ள படுகிறது.எனவே எங்களுக்கு சுய விருப்பம் என்பதற்கும் தெய்வீக சங்கல்பம் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை தயவுசெய்து தெளிவு படுத்துங்கள் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்: அகந்தை மற்றும் அறியாமையினால்தான் இது போன்ற சந்தேகங்கள் உங்களுக்கு தோன்றுகின்றன.

மேலும் நீங்கள் உடலோடு மட்டுமே உங்களை தொடர்பு படுத்தி கொள்வதால் உங்களால் சத்தியத்தை உணர முடிவதில்லை.

உண்மையில் நீங்கள் உங்கள் புலன்களுக்கு முற்றிலுமாக அடிமையாகி இருக்கின்றீர்கள் முதலில் நீங்கள் சுதந்திரமானவ ர்களாகவே இல்லையே.

அப்படி இருக்கும் போது சதந்திரமான சுய விருப்பம் உங்களுக்கு எப்படி இருக்க முடியும்.

கடவுள் ஒருவரே முற்றிலும் சுதந்திரமானவர்

அவருக்கு மேற்பட்டு எவரும் இல்லை.

அவரே அனைத்திற்கும் எஜமானர். எனவே அருடைய விருப்பமே தெய்வீக சங்கல்பமாகிறது.

ஆனால் இன்றோ ஒவ்வொருவரும் தங்களுக்கு சுதந்திரமான சுய விருப்பம் உள்ளதாகவும் அந்த சுய புத்தியின்படியே தாங்கள் செயல்படுவதாகவும் கூறிக்கொள்கிறார்கள்.

மனிதர்களின் இந்த சுய புத்தி என்பது ஸ்திரமாக இல்லாமல் மாறிகொண்டே இருக்கிறது.

ஆனால் தெய்வீக சங்கல்பம் என்பது மாறுபடாமல் நிலையாக இருக்கின்றது.

நீங்கள் சுய விருப்பத்துடன் செயல்படும்போது அதில் வெற்றியும் பெறலாம் அல்லது தோல்வியும் அடையலாம்.வெற்றி பெரும்போது பெருமையும் அகந்தையும் உண்டாகிறது.

தோல்வியினால் வெறுப்பும் ஏமாற்றமும் மிஞ்சுகிறது.

ஆனால் தெய்வீக சங்கல்பமோ விருப்பு வெறுப்பை எல்லாம் கடந்து நிலைத்து நிற்பதாகும்.

இதில் நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் தெய்வத்திடம் முழுமையாக சரணாகதி அடைவதுதான்.

இதன் அர்த்தம் என்னவென்றால் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் இவையனைத்தும் இறைவனின் பிரசாதமாகவே அதாவது இறைவனின் சங்கல்பபடியே நடப்பதாக ஏற்று கொள்ள வேண்டும்.

இதுவே பக்தியின் உயர்ந்த நிலையான ஞான நிலை என்பதாகும்.

சொல்ல போனால் உங்களுக்கு என்ன தர வேண்டும் எப்பொழுது தர வேண்டும் என்பதெல்லாம் இறைவனுக்கு தெரியும்.

எல்லாமே கடவுளின் சங்கல்பபடியே நடக்கின்றன.

இதை நீங்கள் நன்கு உணர்ந்து கொண்டால் எப்போதுமே நீங்கள் தற்பெருமை அகந்தை விரக்தி மனசோர்வு துக்கம் போன்றவைகளால் துன்பபட மாட்டீர்கள்.

தெய்வீக சங்கல்பம் என்பது உங்கள் அக உணர்வாக உள்ளுணர்வாக உங்களுக்கு உள்ளேயே இருக்கிறது.

ஆனால் அதை நீங்கள் உணர்வதற்குகூட முயற்சி செய்யாமல் புறக்கணிக்கின்றீர்கள்.

வெளிஉலகில் அலைபாய்ந்து கொண்டிருக்கும்
உங்கள் மனதை நீங்கள் உள் புறமாக திரும்பும்போது உங்கள் புத்தி உங்களுக்கு உள்ளேயே இருக்கின்ற தெய்வீக அக உணர்வின் மீது பதிகின்றது.அப்போது வெளியே சுற்றி திரிந்து கொண்டிக்கும் உங்கள் புலன்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகின்றன.
அங்கே நீங்கள் உங்கள் உள்ளிருந்து ஒலித்துக் கொண்டிருக்கும் தெய்வத்தின் குரலை தெளிவாக கேட்க முடியும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி பக்தி சரணாகதி இவை இரண்டிற்கும் இடையிலான வித்தியாசம் பற்றி எங்களுக்கு எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
பக்தி என்பது இரட்டை நிலை கொண்டதாகும்.
பக்தன் மற்றும் கடவுள் என இருவர் உள்ளனர்.இது இரட்டை தன்மை கொண்ட ஆன்மீக பாதையாகும்.கடவுள் இல்லை என்றால் பக்தன் இல்லை. பக்தன் இல்லை என்றால் கடவுள் இல்லை.பக்தி என்ற ஆன்மீக செயல்பாடே இவர்கள் இருவரையும் இணைக்கின்றது.
ஆனால் சரணாகதி என்பது ஏகாத்ம பாவம் கொண்ட இரட்டை நிலை இல்லாத ஆன்மீக பாதையாகும்.நீங்கள் கடவுளிடம் சரணாகதி செய்து கொண்டுவிட்டால் பிறகு அங்கே நீங்கள் இல்லாமல் போய் விடுகிறீர்கள்.உங்களுக்கென்ற தனித்துவம் அங்கே எதுவும் இல்லாமல் போய்விடும்.
நீரும் சர்க்கரையும் இருக்கின்றது.இரண்டும் தனித்தனியாக இருக்கும் போது வேறு வேறான உருவம் சுவை நிறம் கொண்டவையாக உள்ளன.இதுவே த்வைதமாகும்.
இப்போது இரண்டையும் ஒன்றாக சேர்த்து விட்டால் என்ன ஆகிறது.அது சர்க்கரை கரைசலாகிறது.
அது போலவே பக்தன் கடவுளிடம் முழுமையாக சரணாகதி செய்து கொள்ளும் போது கடவுள் தன்னிலிருந்து வேறானவர் என்ற பாவம் மறைந்து விடுகிறது.தானும் கடவுளும் ஒன்றே என்ற மனநிலையை எட்டுவதே அத்தவைதமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நம்பிக்கை- பரேமை இவை இரண்டை பற்றியும் எங்களுக்கு சொல்ல முடியுமா.நம்பிக்கை இருப்பதால் ப்ரேமை வருகிறதா அல்லது ப்ரேமையிலிருந்து நம்பிக்கை பிறக்கிறதா.

ஸ்வாமியின் பதில் :
நம்பிக்கையிலிருந்து தான் ப்ரேமை வருகிறது.இதில் சந்தேகம் வேண்டாம்.உங்களின் தாய் தந்தை மனைவி மகன் என்று அனைவர் பேரிலும் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.அதனாலேயே அவர்களை உங்களால் நேசிக்க முடிகிறது.சந்தேகப்படுகின்ற ஒருவரை நீங்கள் நேசிப்பீர்களா.
எனவே முதலில் நம்பிக்கை.பிறகு ப்ரேமை.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி சிலர் முதலில் தெய்வத்துடன் நெருங்கிய அனுபவம் கிட்டினால் தான் தெய்வத்தின் மீது நம்பிக்கை ஏற்படும் என்கிறார்கள்.வேறு சிலரோ திடமான ஆழ் நம்பிக்கை இருந்தால்தான் தெய்வீகத்தை உணர முடியும் என்கிறார்கள்.
இதில் எது சரியானது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
இங்கும் நம்பிக்கை தான் முதலில் வருகிறது.இறை நம்பிக்கை தான் இறை அனுபவத்தை கொண்டு சேர்க்கும்.சலனமில்லாத நம்பிக்கையே அடிப்படையாகும். நீச்சல் கற்று கொள்ள நீங்கள் முதலில் தண்ணீரில் குதித்தாக வேண்டும்.நீச்சல் அடிப்பது எப்படி என தெரிந்து கொண்ட பிறகு தான் தண்ணீரில் குதிப்பேன் என கூறமுடியாது.நீச்சலை தரையில் கற்று கொள்ள முடியுமா.இங்கே தண்ணீர் என்பது இறை நம்பிக்கை.நீச்சல் பழகுவது என்பது இறை அனுபவமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நான் கடவுளுடன் இருக்கிறேன் என்பது சரியா அல்லது கடவுள் என்னுடன் இரூக்கிறார் என சொல்வது சரியா.

ஸ்வாமியின் பதில் :
வேதங்கள் ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் என கூறுகின்றன.கடவுள் எங்கும் நிறைந்தவர்.இந்த பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்தவர்.
வசுதேவ சர்வமிதி என்பது வேத வாக்கு.சிருஷ்டி அனைத்தும் இறைவனுக்குள் அடக்கம்.
எனவே நான் கடவுளிடம் இருக்கிறேன் என்று சொல்வதே சரியானது.கடவுள் என்னிடம் இருக்கிறார் என்று சொல்வது தவறானது.
இந்த பிரபஞ்சம் முழுவதும் கடவுளுக்குள் இருக்கும் போது நீங்களும் கடவுளுக்குள் தான் இருக்கிறீர்கள்.
நீங்கள் கையில் ஒரு ரோஜா மலரை வைத்திருக்கும் போது மலர் சிறியதாகவும் நீங்கள் பெரிய உருவம் உடையவராகவும் இருக்கிறீர்கள்.
அது போல் கடவுள் மிக பெரியவர்.பிரபஞ்சம் அவருள்ளே இருக்கிறது.நீங்கள் அந்த தெய்வீகத்தின் ஒரு சிறிய பொறியே ஆவீர்கள்.என்னுடைய சிறு துகளே படைப்பிலுள்ள உயிரினங்களாகும் என பகவான் ஶ்ரீ கிருஷ்ணர் கீதையிலே கூறுகின்றார்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்